

கழகத் தலைவர், தமிழக முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, "நவீன தமிழ்நாட்டின் சிற்பி", செம்மொழி நாயகர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்தநாளினை முன்னிட்டு, புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி சட்டமன்ற தொகுதி, திருவரங்குளம் மேற்கு ஒன்றிய கழகம், ஆலங்குடி பேரூர் கழகங்கள் சார்பில் ஆலங்குடியில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் கழக துணைப் பொதுச் செயலாளர் திருச்சி என்.சிவா எம்.பி சிறப்புரையாற்றினார். நிகழ்வில் கனிம வளம் மற்றும் இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், த.சந்திரசேகரன், ஞானஇளங்கோவன், ஸ்ரீதேவி அண்ணாதுரை, கே.பி.கே.டி.தங்கமணி, அரு.வடிவேல், கே.எஸ்.ரவி, ஆர்.வி.செல்வம ஆ.பழனிக்குமார், ராசி முருகானந்தம், ஆலங்குடி செல்வராஜ், பள்ளத்து விடுதி நாராயணன், கழக மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், ஊராட்சி கிளை கழக நிர்வாகிகள் மற்றும் சார்பு அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் ஏராளமான பொதுமக்கள் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

### தமிழ்நாட்டில், இரண்டு, மூன்று முறை தோற்றும் இப்போதும் பாடம் கற்கவில்லை!

# தி.மு.க. கூட்டணியை அசைத்துக்கூடப் பார்க்க முடியாது!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!



சென்னை, ஜூன் 11 -

தமிழ்நாட்டில், இரண்டு, மூன்று முறை தோற்றும் இப்போதும் பாடம் கற்கவில்லை. சில அரசியல் அடமானங்களும், அரசியல் புரோக்கர்கள் வீசும் வலையில் சிக்கும் பேர அரசியல்வாதிகளும் புதிய தெம்பாகிவிட முடியாது. தமிழ்நாட்டில் மீண்டும் 'திராவிட மாடல்' ஆட்சி என்பது அசைக்க முடியாத கொள்கைக் கோட்டையாக உள்ளது. இவர்களின் அரசியல் 'சித்து' விளையாட்டுகள், பம்மாத்து பேரங்களுக்கு சில சபல புத்திக் கட்சிகளும், ஏல அரசியல்வாதிகளும் கிடைப்பார்களே தவிர, வெற்றிக் கனியைப் பெறலாம் என்று நினைத்து, தி.மு.க. கூட்டணியை அசைத்துக்கூடப் பார்க்க முடியாது என்று அறிக்கை வெளியிட்டுள்ளார் திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள்.

அவரது அறிக்கை வருமாறு:

பா.ஜ.க., ஆர்.எஸ்.எஸ். மற்றும் அதன் வகையறாக்களான ஹிந்து முன்னணி, விசுவ ஹிந்து பரிஷத் போன்ற ஆரிய (ஹிந்து) மதவெறி கட்சிகளின் திடீர் 'முருக பக்தி'யைக் கண்டு, ஏமாறுவதற்குப் பெரியார் மண்ணான திராவிட மண் - தமிழ்நாடு ஒருபோதும் இடந்தராது.

சென்ற சில மாதங்களுக்கு முன்பே, இப்போது அரசியல் 'புது இடந்தேடி'யாகியுள்ள அண்ணாமலை போன்றவர்கள் முன்னின்று, அமைதிப் பூங்காவான தமிழ்நாட்டில் மதக் கலவரம் ஏற்படச் செய்யவே, "திருப்பரங்குன்றத்திலுள்ள முருகன் கோவிலுக்கு ஆபத்து, அந்த மலையை இஸ்லாமியர்கள் தங்கள் வயப்படுத்த, தங்களது மதநெறிக்கு ஏற்ப 'சிக்கந்தர் மலை' என்று மாற்றிட முயற்சிக்கிறார்கள், ஹிந்துக்களே ஒன்று சேருங்கள்" என்று அங்கே கண்டன ஆர்ப்பாட்டக் கலவரம் ஏற்படுத்த முயன்று தோற்றுவிட்டனர்.

**திருப்பரங்குன்றம் மக்களின் ஒற்றுமை!**

அவ்வூரில் உள்ள அனைத்து மக்களும் ஹிந்து, முஸ்லிம் மற்றும் நம்பிக்கையாளர் அல்லாத குடிமக்கள் எல்லோரும் ஒரே குரலில், "நாங்கள் ஒன்றுபட்டு சகோதரர்களாக வாழுகிறோம்; ஏன் வெளியூர் ஆட்களைக் கொணர்ந்து இங்கே கலவரம் உருவாக்க முயற்சிக்கிறீர்கள்" என்று முகத்தில் அறைந்தார் போல் கேட்டனர்.

அந்தக் கலவர முயற்சிகள் வெறும் 'புஸ்வாணம்' ஆகிவிட்டன.

என்றாலும், மக்களுக்குள்ள கடவுள் பக்தியைப் பயன்படுத்தி, கோவில்களை ஆர்.எஸ்.எஸ். மற்றும் புரோகித வர்க்கம் தங்களது ஆதிக்கப் பீடங்களாகவே ஆக்கிக் கொள்ளும் வித்தையில் கைதேர்ந்தவர்களாகிவிட்டதால், கோவில், திருவிழா, சடங்கு, சம்பிரதாயங்களை ஒரு வாய்ப் பாக்கி, மக்கள் பகுத்தறிவு, சமத்துவம், சுயமரியாதைக்குக் கேடு விளைவிக்கின்றனர்.

2026-ஆம் ஆண்டு நடைபெறவிருக்கும் சட்டப்பேரவைத் தேர்தலில், இந்தப் பக்தி போதையை 'ஓட்டு வங்கி'யாக்கிக் கொள்ளவே ஆர்.எஸ்.எஸ்., சங் பரிவார் கூட்டம் முருகக் கடவுளைக் காப்பாற்ற மாநாடு போடுகிறார்களாம்!

சர்வ சக்தி வாய்ந்த கடவுளுக்கு இவர்களின் பாதுகாப்பு ஏன் தேவை? என்று சிறுபிள்ளைக்கூட - பகுத்தறிவுடன் கேள்வி கேட்குமே தமிழ்நாட்டில்!

**பா.ஜ.க.வினருக்கு முருகன் அரசியல் ஆயுதமா?**

ஆர்.எஸ்.எஸ்., பா.ஜ.க. கூட்டத்தினர் தி.மு.க. ஆட்சியை ஒழித்திட, மற்ற வியூகங்கள் அனைத்தும் தோற்றுவிட்டதால், முழுக்க முழுக்க மதக் கலவரம் ஏற்படுத்திட, புதிய அரசியல் - 'பக்தி ஆயுதமாக' முருகக் காதல் பொத்துக் கொண்டு வந்துவிட்டது!

வட மாநிலங்களில் எல்லாம் 'ராம், ராம்' என்று ராமன் கோவிலைக் காட்டி உ.பி. போன்ற மாநில ஆட்சிகளை முன்பு கைப்பற்றினர்.

ஆனால், அதில்கூட 'God Show' பிரதமர் மோடி நடத்தியும், அயோத்தியிலேயே கூட பி.ஜே.பி. வெற்றி பெறாமல் எதிர்க்கட்சியினரே வெற்றி பெற்றனர்!

அதேபோல், மேற்குவங்கத்தில் காளி பூஜை ஒரு முக்கிய பண்டிகை. சில மாதங்களுக்கு முன்பு, அதிலும் தலையிட்டுப் பார்த்தனர். காளி பக்திக்கும், இராம பக்திக்கும்கூட எதிர்களங்கள் அமைத்து, அங்குள்ள பா.ஜ.க. அல்லாத திரிணாமுல் காங்கிரஸ் மம்தா ஆட்சியை அகற்ற, 'கஜகர்ணம்' போட்டு, மூக்குடை பட்டனர்!

தமிழ்நாட்டில் ஏற்கெனவே பா.ஜ.க. தமிழ்நாடு கட்சித் தலைவர் வேலோடு சுற்றிச் சுற்றி வந்தார்; முருகன் அருள்பாலிக்கவில்லை என்பது நாடறிந்த உண்மை!

**மீண்டும் 'திராவிட மாடல்' ஆட்சி!**

வேலைத் தூக்கியவர், முன்பு தாராபுரம் தொகுதியில் சட்டப்பேரவைத் தேர்தலில் தோற்றார். பிறகு நீலகிரி நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு, ஆ.இராசாவை எதிர்த்து நின்றபோது, முடிவு என்னாயிற்று என்பது எல்லோரும் அறிந்ததே!

தமிழ்நாட்டு மக்கள், குறிப்பாக வாக்காளர்கள் தங்களது பக்தி உணர்வுக்காக ஒருபோதும் கொள்ளிக்கட்டையை எடுத்துத் தலையைச் சொறிந்து கொள்ளவே மாட்டார்கள்.

தமிழ்நாட்டில், இரண்டு, மூன்று முறை தோற்றும் இப்போதும் பாடம் கற்கவில்லை. சில அரசியல் அடமானங்களும், அரசியல் புரோ க்கர்கள் வீசும் வலையில் சிக்கும் பேர அரசியல்வாதிகளும் புதிய தெம்பாகிவிட முடியாது. தமிழ்நாட்டில் மீண்டும் 'திராவிட மாடல்' ஆட்சி என்பது அசைக்க முடியாத கொள்கைக் கோட்டையாக உள்ளது.

ஊழலைப்பற்றி இங்கே வந்து 'சண்ட மாருதம் பேசும்' அமித்ஷாக்கள், அவர்கள் கட்சி ஆளும் உ.பி., ம.பி., ராஜஸ்தான் மற்றும் பல மாநிலங்கள் ஆட்சிகளின் லட்சணம் பற்றிய செய்திகளை மறந்துவிட்டா பேசுவது?

இராமனைக் காட்டி, வெற்றி தேட முனைந்த 1971 இல் தமிழ்நாட்டுத் தேர்தல் கதையும், முடிவுகளும்பற்றி அமித்ஷாக்கள் அறிந்திருக்க முடியாது.

அப்போது அவருக்கு அரசியல் களமே தெரிந்திருக்க வாய்ப்பில்லையே!

**ஆப்பசைத்த கதைதான்!**

எனவே, இவர்களின் அரசியல் 'சித்து' விளையாட்டுகள், பம்மாத்து பேரங்களுக்கு சில சபல புத்திக் கட்சிகளும், ஏல அரசியல்வாதிகளும் கிடைப்பார்களே தவிர, வெற்றிக் கனியைப் பெறலாம் என்று நினைத்து, தி.மு.க. கூட்டணியை அசைத்துக்கூடப் பார்க்க முடியாது. ஆப்பசைத்த கதைதான் - நாளைய வரலாறு சொல்லும் என்பது உறுதி.

இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.




தருமபுரி கிழக்கு மாவட்டக் கழக அலுவலகம் தளபதி அரங்கத்தில் நடைபெற்ற கிழக்கு மாவட்ட தி.மு.க. ஆலோசனைக் கூட்டத்தில் தருமபுரி கிழக்கு மாவட்டக் கழக பொறுப்பாளர், நாடாளுமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் ஆ.மணி கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார். கூட்டத்தில் தருமபுரி முன்னாள் கிழக்கு மாவட்ட செயலாளர் தடங்கம் பெ.சுப்ரமணி, முன்னாள் மாவட்டச் செயலாளர் பி.என்.பி.இன்பசேகரன், தருமபுரி சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் டி.செங்குட்டுவன், பென்னாகரம் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் எம்.பி.பாரி, நகர கழக செயலாளர் நாட்டான் மாது,மாநில நிர்வாகி ஆர்.பி.செந்தில்குமார், மாவட்ட நிர்வாகிகள் வே.தங்கமணி, ரேணுகா தேவி,ஆறுமுகம்,உமாசங்கர், ஆறுமுகம் மற்றும் ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள் உள்ளிட்ட கழகத்தினர் கலந்து கொண்டனர்.



புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் தேர் திருவிழாவில், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் நேற்று முன்தினம் (09.06.2025) கலந்துகொண்டு, தேரினை வடம் பிடித்து இழுத்து துவக்கி வைத்தார். உடன், முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே.செல்லப்பாண்டியன் , தஞ்சாவூர் மாநகராட்சி துணை மேயர் மரு.அஞ்சுகம்பூபதி, செயல் அலுவலர் (திருக்கோயில்கள்) முத்துராமன் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

### தமிழ்நாட்டின் கள நிலவரம் அறியாமல் பகல் கனவு காணும் அமித்ஷா!

# இந்தியாவிலேயே பா.ஜ.க. காலூன்ற முடியாத மாநிலம் தமிழ்நாடுதான்!

## தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் கு.செல்வப்பெருந்தகை அறிக்கை!



சென்னை, ஜூன் 11 -

இந்தியாவிலேயே பா.ஜ.க. காலூன்ற முடியாத மாநிலம் தமிழ்நாடுதான் என்றும் தமிழ்நாட்டின் கள நிலவரம் அறியாமல் அமித்ஷா பகல் கனவு காணுகிறார் என்றும் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் கு.செல்வபெருந்தகை எம்.எல்.ஏ. அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவரது அறிக்கை வருமாறு:

இந்தியாவிலேயே பா.ஜ.க. காலூன்ற முடியாத வகுப்புவாத எதிர்ப்பு மாநிலமாக தமிழ்நாடு இருப்பதை சகித்துக் கொள்ள முடியாத உள்துறை அமைச்சர் அமித்ஷா அடிக்கடி தமிழ்நாட்டுக்கு வருகிறார். நேற்று மதுரையில் நடைபெற்ற பா.ஜ.க. கூட்டத்தில் 2026 இல் பாரதிய ஜனதா கூட்டணி ஆட்சியை பிடிக்கும் என்று பேசியிருக்கிறார். தமிழ்நாட்டில் அமைய இருக்கிற கூட்டணிக்கு அ.தி.மு.க. தலைமையேற்கப் போகிறதா ? அல்லது பாரதிய ஜனதா தலைமையேற்கப் போகிறதா ? என்பது முடிவு செய்யாத நிலையில் தன்னிச்சையாக பா.ஜ.க. கூட்டணி ஆட்சியைப் பிடிக்கும் என்று கூறி யிருக்கிறார். தமிழகத்தின் கள நிலவரத்தை முற்றிலும் அறியாமல் பகல் கனவு காண்கிற வகையில் அவர் பேசியிருக்கிறார். தமிழ்நாட்டு மக்களின் நலனுக்கு விரோதமாக தொடர்ந்து செயல்பட்டு வருகிற ஒன்றிய பா.ஜ.க. அரசை தமிழ்நாட்டு மக்கள் என்றைக்கும் மறக்கவும், மன்னிக்கவும் மாட்டார்கள், ஏற்கவும் மாட்டார்கள்.

**தமிழ்நாட்டை வஞ்சிக்கும் அமித்ஷா!**

அமித்ஷா பேசும்போது, தமிழ் மொழியில் பேச முடியவில்லையே என்ற வருத்தம் ஏற்படுவதாக நாடகமாடியிருக்கிறார். தமிழ் மொழியின் மீது உண்மையிலேயே பற்று இருக்குமேயானால், செம்மொழிக்கு மூன்றாண்டுகளில் ரூபாய் 24 கோடி ஒதுக்கி விட்டு, அதே காலத்தில் 24,000 மக்கள் பேசுகிற சமஸ்கிருத மொழிக்கு ரூபாய் 664 கோடி ஒதுக்கிய நிலையில் தமிழ் மொழியை வஞ்சித்து வருவதற்கு இதைவிட வேறு ஆதாரம் என்ன தேவை ? தேசிய கல்விக் கொள்கையின் மூலம் இந்தி திணிப்பை எதிர்த்த தமிழ்நாட்டிற்கு சமக்ரா சிக்ஷா அபியான் திட்டத்தின் மூலம் ஒதுக்க வேண்டிய ரூபாய் 2152 கோடியை ஒதுக்காமல் வஞ்சித்ததற்கு அமித்ஷா என்ன பதில் கூறப் போகிறார் ? தமிழ்நாட்டில் 1968 முதல் 57 ஆண்டுகளாக தமிழ், ஆங்கிலம் என்ற இருமொழிக் கொள்கை தான் நடைமுறையில் இருந்து வருகிறது. அதற்கு மாறாக, இந்தி மொழியை திணிக்க கங்கணம் கட்டிக் கொண்டு செயல்படும் அமித்ஷாவினுடைய கபட நாடகத்தை தமிழ்நாட்டு மக்கள் ஏற்க மாட்டார்கள்.

பா.ஜ.க.வினர் முருக பக்தர்கள் மாநாடு நடத்தப் போவதாக அமித்ஷா கூறியிருக்கிறார். அதில் பெருந்திரளானோர் பங்கேற்க வேண்டுமென அழைப்பு விடுத்திருக்கிறார். தமிழ்நாட்டு மக்கள் முருகனை வழிபட வேண்டுமென்றால் அறுபடை வீடுகளில் உள்ள முருகனை வழிபட செல்வார்களேயொழிய, பா.ஜ.க.வினர் நடத்தும் முருக பக்தர்கள் மாநாட்டிற்கு நிச்சயம் செல்ல மாட்டார்கள். ஏற்கனவே வேல் வைத்து அரசியல் செய்தார்கள், இன்று முருகனை வைத்து அரசியல் செய்ய முற்படுகிறார்கள். தமிழ்நாட்டு மக்கள் ஏற்கக் கூடிய கொள்கை இல்லாத காரணத்தால் இத்தகைய வழிமுறையை பா.ஜ.க. கையாள்கிறது. தமிழ்க் கடவுள் முருகன் உள்ளிட்ட அனைத்து ஆலயங்களிலும் தமிழில் அர்ச்சனை செய்வதற்காக தி.மு.க. அரசு உச்ச நீதிமன்றம் வரை போராடி சமஸ்கிருதத்தை அகற்றி விட்டு, தமிழில் அர்ச்சனை செய்கிற உரிமையை பெற்றது. அன்று சமஸ்கிருதத்திற்காக உச்சநீதிமன்றம் வரைச் சென்று தமிழில் அர்ச்சனை செய்வதற்கு எதிராக வாதாடியவர்களின் வாரிசுகளான பா.ஜ.க.வினருக்கு முருக பக்தர்கள் மாநாடு நடத்த என்ன தகுதி இருக்கிறது ?

இந்தியாவின் வடகிழக்கு மாநிலங்களில் ஒன்றான அழகிய மணிப்பூர் மலைப் பகுதியை ஆள வக்கற்றவர்கள் தான் பா.ஜ.க.வினர். கடந்த 2022 பிப்ரவரியில் சட்டமன்றத் தேர்தல் நடைபெற்று பிரேன்சிங் தலைமையில் பா.ஜ.க. ஆட்சி அமைந்தது. ஆனால், அந்த ஆட்சி மலைப் பகுதியில் உள்ள குக்கி இன மக்களுக்கு எதிராகவும், மெய்த்தி இன மக்களுக்கு ஆதரவாகவும் பாரபட்சமாக ஆட்சி செய்ததால் அங்கே தொடர்ந்து கலவரம் நடைபெற்று நூற்றுக்கணக்கானோர் உயிரிழந்து, ஆயிரக்கணக்கானோர் வீடுகளை இழந்து இன்றைக்கும் அகதிகளாக வாழ்ந்து வருகிறார்கள். பா.ஜ.க. ஆட்சி முழுமையாக தோல்வியடைந்த காரணத்தினால் அங்கு, கடந்த பிப்ரவரி 13, 2025 இல் ஜனாதிபதி ஆட்சி அமல்படுத்தப்பட்டது. ஆனால், கடந்த 2 ஆண்டுகளாக மணிப்பூர் பற்றி எரிந்து கொண்டிருக்கிறது. இந்த மணிப்பூர் கலவரத்திற்கு அந்த முதலமைச்சர் எந்த அளவிற்கு பொறுப்போ, அதே அளவிற்கு உள்துறை அமைச்சர் அமித்ஷாவும் பொறுப்பாவார். அங்கே கலவரங்கள் தொடர்ந்து நடைபெறுவதை தடுக்க முடியாத உள்துறை அமைச்சராக உள்ள அமித்ஷா, தமிழ்நாட்டில் பா.ஜ.க. ஆட்சி அமைக்கும் என்று சொல்வதற்கு என்ன உரிமை இருக்கிறது ? உலகம் முழுவதும் சுற்றி வலம் வருகிற பிரதமர் மோடி, எரிந்து கொண்டிருக்கிற மணிப்பூர் மாநில மக்களை சந்தித்து பேச இதுவரை முற்படாதது ஏன் ?

ஜனநாயகத்தின் மீது நம்பிக்கையில்லாத பிரதமர் மோடி, எதிர்கட்சிகளின் கேள்விகளுக்கு பதில் கூற மாட்டார், அனைத்து கட்சிக் கூட்டத்தில் பங்கேற்க மாட்டார், பாராளுமன்றத்தில் கேள்விகளுக்கு பதில் கூற மாட்டார். கடந்த 11 ஆண்டுகளில் ஒரே ஒரு முறை கூட பத்திரிகையாளர் சந்திப்பை நடத்தியதில்லை. ஜனநாயகத்தில் ஒரு சர்வாதிகாரி போல ஆட்சி நடத்தி வருகிற பிரதமர் மோடியின் எதேச்சதிகாரமான செயல்களுக்கு துணையாக இருப்பவர் தான் உள்துறை அமைச்சர் அமித்ஷா. தமிழ்நாட்டில் மக்கள் பேராதரவோடு நடைபெற்று வருகிற மு.க. ஸ்டாலின் தலைமையிலான நல்லாட்சியை குறை கூறுவதற்கு அமித்ஷாவுக்கு எந்த உரிமையும் இல்லை.

**தமிழ்நாட்டிற்கு குறைந்த நிதி ஒதுக்கீடு!**

தமிழ்நாட்டிற்கு அதிக நிதி ஒதுக்கியதாக அமித்ஷா கூறியிருக்கிறார். ஆனால், ஆதாரப்பூர்வமான புள்ளி விவரங்க ளின் படி கடந்த 7 ஆண்டுகளில் நேரடி வரி மற்றும் ஜி.எஸ்.டி., செஸ் ஆகியவற்றின் மூலம் தமிழ்நாட்டிலிருந்து பா.ஜ.க. அரசு வசூலித்த வரி ரூபாய் 7.38 லட்சம் கோடி. ஆனால், ஒன்றிய பா.ஜ.க. அரசு, தமிழ்நாட்டின் பங்காக வழங்கியது ரூபாய் 2.56 லட்சம் கோடி. அதிகமான நிதியை தமிழ்நாட்டு மக்களிடமிருந்து வஞ்சித்து, வாட்டி வதைத்து வசூலித்து விட்டு தமிழ்நாட்டிற்கு அதிக நிதி ஒதுக்கியதாக அமித்ஷா கூறுவதற்கு என்ன ஆதாரம் இருக்கிறது ? இதற்கு அமித்ஷா பதில் கூறுவாரா?

எனவே, தமிழ்நாட்டு மக்களை தொடர்ந்து மாற்றாந்தாய் மனப்பான்மையோடு நடத்தி வருகிற பா.ஜ.க.வின் மாய்மால அரசியல் ஒருபோதும் எடுபடாது. தமிழ்நாட்டில் பா.ஜ.க. ஆட்சி என்பது கானல் நீராகத் தான் இருக்கப் போகிறது.

இவ்வாறு கு.செல்வப்பெருந்தகை எம்.எல்.ஏ. அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.




கோவை மாநகர் மாவட்டக் கழக செயற்குழு கூட்டம் வடகோவை, மாவட்டக் கழக அலுவலகத்தில் மாநகர் மாவட்டச் செயலாளர், சிங்காநல்லூர் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் நா.கார்த்திக் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கழக சொத்துப் பாதுகாப்பு குழு துணைத்தலைவர் பொங்கலூர் நா.பழனிச்சாமி, மாநகர் மாவட்ட துணைச் செயலாளர்கள் கோட்டை அப்பாஸ், தளபதி இளங்கோ, கல்பனா செந்தில், பொருளாளர் எஸ்.எம்.பி.முருகன், கழக தீர்மானக்குழு இணைச் செயலாளர் பி.நாச்சிமுத்து, சட்டத்துறை இணைச் செயலாளர் வழக்கறிஞர் பி.ஆர்.அருள்மொழி, தீர்மானக்குழு உறுப்பினர் மு.இரா.செல்வராஜ், தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் அ.தமிழ்மறை, மாணவர் அணி துணை செயலாளர் வி.ஜி.கோகுல், கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை துணை செயலாளர் மீனா ஜெயக்குமார், தொ.மு.ச. உமா காந்தன் உள்பட தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதிக் கழகச் செயலாளர்கள், மாநகர் மாவட்ட அணி அமைப்பாளர்கள், இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.